


விமானத்தைக் கடத்தி, மோதுவதற்காகப் போன பத்தொன்பது பேரில் ஒருத்தரிடம்கூட ஒரு கத்தி, பிச்சுவா, பிஸ்டல் என்று எந்த உபகரணமும் கிடையாது. விஜயகாந்த் பட வில்லன்கள் மாதிரி, உடம்பெல்லாம் குண்டு கட்டிக்கொண்டு ஆஞ்சநேயர் மாதிரி, சட்டையைத் திறந்துகாட்டி பயமுறுத்தினார்களா என்றால், அதுவும் கிடையாது. அவர்களிடமிருந்த அதிகபட்ச ஆயுதம், மிளகுப் பொடி! எதற்கும் இருக்கட்டும் என்று கண்ணெரிச்சல் தரவல்ல சில எளிய ஸ்பிரேக்களையும் எடுத்துப் போயிருந்தார்கள்.

நான்கு விமானங்களைக் கடத்திய பிரகஸ்பதிகளுமே, ஒரே மாதிரியான கடத்தல் உத்திகளைத்தான் கையாண்டார்கள். விமானம் புறப்பட்டுப் பதினைந்து நிமிடங்கள் வரை சமர்த்துப் பிள்ளைகளாக உட்கார்ந்திருப்பது. சுமார் 25 ஆயிரம் அடி உயரத்துக்குப் போன பிறகு, சீட்டை விட்டு எழுந்துகொள்வது. 'என்ன வேண்டும்?' என்று கேட்கும் அழகான பணிப்பெண்களை ஓர் அறை அறைந்து தள்ளிவிட்டு, காக்பிட்டை நோக்கி முன்னேறுவது. யாராவது தடுக்க வந்தால், ஒரே அடி. ரொம்பத் தொல்லை கொடுத்தால் மிளகுப்பொடி!

ஆனால் மிரட்டினார்கள். தங்களிடம் வெடிகுண்டு இருப்பதாகவும், 'ஏதாவது வம்பு பண்ணினால் இருபத்தஞ்சாயிரம் அடி உயரத்திலிருந்து, நேரே சொர்க்க லோகம் போய்ச்சேரவேண்டி வரும்' என்றும் சொல்லிக் குலைநடுங்க வைத்தார்கள். கையில் கோலிக்குண்டுகூட இல்லாமல் ஒரு வெடிகுண்டு மிரட்டல் செய்யும் துணிச்சல் அவர்களிடம் இருந்திருக்கிறது!

காக்பிட்டைத் தாக்கி, கைப்பற்றி, விமானிகளைக் கொன்று அல்லது வீழ்த்தி, விமானத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்தபிறகு, நான்கு அல் காயிதா விமானிகளுமே தத்தம் இலக்குகளை நோக்கி, விமானத்தின் திசையைத் திருப்பிவிட்டார்கள். வேகம், அதிவேகம். விடலைகள் பைக் ஓட்டுகிற மாதிரி அவர்கள் ஓட்டத்தொடங்கியபோது, பயணிகள் அத்தனை பேருமே பயத்தில் அலறினார்கள்.

அட்டா கடத்திய விமானத்தின் பணிப்பெண் ஸ்வீனி, "அபாயம்! விமானம் மிகவும் தாழப் பறக்கிறது. இது நிச்சயம் விபரீதத்தில்தான் முடியப்போகிறது" என்று அலறியது, கண்ட்ரோல் ரூமில் பதிவாகியது.

"கொஞ்சம் முயற்சி செய். ஜன்னல் வழியாக, இப்போது நீங்கள் பறந்துகொண்டிருக்கும் இடம் எது என்று ஓரளவு பார்த்துக் கணிக்க முடிகிறதா சொல்" என்று அங்கிருந்து பதில் குரல் கேட்க,

"இல்லை....விமானம் கீழே போகிறது. மிகவும் கீழே போகிறது. மிக, மிக....ஐயோ...." என்பதுதான் இறுதி அலறல்.

அப்போது நேரம் சரியாக 8 மணி, 46 நிமிடங்கள், நாற்பது விநாடிகள். அந்த விமானம் நியூயார்க்கிலுள்ள உலக வர்த்தக மையக் கட்டடத்தின் வடக்குக் கோபுரத்தின் மீது

ஆக்ரோஷமாகச் சீறி வந்து மோதியது.

விமானத்தில் இருந்த (அட்டா உள்ளிட்ட) எண்பத்தொரு பயணிகள், ஒன்பது விமானப் பணியாளர்கள், பைலட், கோ பைலட் தவிர, வர்த்தக மையக்கட்டடத்தில் இருந்த எண்ணற்ற பொதுமக்கள் என்று, எல்லாரும் கண்ணிமைக்கும் நேரத்தில் கொல்லப்பட்டார்கள். மிகப் பயங்கரமான சப்தத்துடன் அந்த மாபெரும் கட்டடம் இடியத் தொடங்கியது. எழுந்த கரும்புகை விண்ணைத் தொட்டது. எங்கும் அலறல்கள். அவல ஓலங்கள்.

அடுத்த விமானம் மோதிய நேரம் 9.03 மணி. ஷெஹி, ஃபயஸ் பானிஹமாத், முகம்மது அல் ஷெஹ்ரி, அகமது அல் காம்தி, ஹம்சா அல் காம்தி ஆகியோர் கடத்திய யுனைடெட் 175 என்கிற விமானம்.

காலை 8.14-க்கு லோகன் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம், 8.33 மணிக்குத் தன் இலக்கான 31,000 அடி உயரத்தைத் தொட்டுப் பறந்துகொண்டிருந்தது. அதாவது, அமெரிக்கன் 11 விமானம் கடத்தப்பட்ட கணத்தில், இந்த விமானம் தன் பயணத்தை ஆரம்பித்திருந்தது.

8.42 மணிக்கு கேப்டன் விக்டர் சாராஸினிக்கு (ஷ்ஷ்வீநீமீஷ்க்ஷ் ஷிணீக்ஷ்ணீநீவீஸீவீ) டிரான்ஸ்மிட்டர் வழியே, என்னவோ கசமுசாவென்று அரைகுறையாகப் புரிகிற விதமான தகவல் ஒன்று வந்தது. அது அவருக்கு நேரடியாக அனுப்பப்பட்ட தகவல் அல்ல. அமெரிக்கன் 11 விமானம் கடத்தப்பட்டிருந்த நேரம் அது. அங்கிருந்து தரைக்கு அனுப்ப முயற்சி செய்யப்பட்ட தகவல் கொஞ்சம், இந்த விமானத்தில் கசிந்து வந்தது.

தமக்குக் கிட்டிய தகவலைச் சரி பார்க்கவோ, தரைக்குத் தகவல் தெரிவிக்கவோ அவரால் இயலவில்லை. ஏனெனில், அதே நிமிடத்தில் இந்த விமானமும் கடத்தல்காரர்களின் கட்டுப்பாட்டுக்கு வர ஆரம்பித்திருந்தது! அதே முறை. மிளகுத்தூள். கண்ணெரிச்சல் ஸ்பிரே. கூடுதலாக ஒரு ரூலர் தடி. தடுக்க வந்தவர்கள் மண்டையில் நாலு சாத்து சாத்திவிட்டு, காக்பிட்டை உடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்து, விமானியை வீழ்த்தி, விமானத்தைக் கைப்பற்றினார்கள்.

இதனிடையில், விமானத்தின் பின்புறம் இருந்த பீட்டர் ஹான்ஸன் என்கிற ஒரு பயணி, தன் கையில் இருந்த மொபைல் போனை ரகசியமாக உபயோகித்துத் தன் வீட்டைத் தொடர்புகொள்ள முயற்சி செய்திருக்கிறார். அதிர்ஷ்டவசமாக இணைப்புக் கிடைத்து, அவரது தந்தை லீ ஹான்ஸன் என்பவர் பேசவும் செய்திருக்கிறார்.

"அவர்கள் காக்பிட்டைக் கைப்பற்றிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு விமானப் பணிப்பெண் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார். பயணிகளிலும் ஒருசிலர் முன்புறம் உள்ளவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம். விமானம் கடத்தப்பட்டுவிட்டது. உடனே யுனைடெட் ஏர்லைன்ஸைக் கூப்பிட்டு விஷயத்தைச் சொல்லுங்கள். இது ஃப்ளைட் 175. பாஸ்டனிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸ் போய்க்கொண்டிருக்கும் விமானம் என்று சொல்லுங்கள்!" - இதுதான், தன் மகன் அளித்த தகவல் என்று லீ ஹான்ஸன் காவல்துறைக்கு அளித்த வாக்குமூலம்.

சரியாக 9 மணிக்கு லீ ஹான்ஸனுக்கு மீண்டும் அவரது மகனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "நிலவரம் மிகவும் மோசமாகிக்கொண்டிருக்கிறது அப்பா. அவர்களிடம் கத்திகளும் தடிகளும் இருக்கின்றன. பாம் வைத்திருப்பதாகவும் சொல்லுகிறார்கள். விமானம் ஒழுங்காகப் பறக்கவில்லை. சீட்டிலிருந்து அடிக்கடி தூக்கியடிக்கப்படுகிறோம். விமானத்தை பைலட் ஓட்டவில்லை என்று நினைக்கிறேன். மிகவும் தாழ்வாகப் பறக்கிறது. எனக்கென்னவோ அவர்கள் விமானத்தை சிகாகோ நோக்கிச் செலுத்துவதாகத் தெரிகிறது. எதிலோ மோதப்போகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் கவலைப்படாதீர்கள். எப்படியாவது....ஓ, காட்!"

அப்படியே பாதியில் முறிந்தது அந்தக் குரல். அந்தத் தொலைபேசி உரையாடல் முடிவுறும்

கணத்தில், யாரோ ஒரு பெண் கதறி, க்ரீச்சிடும் குரல் ஒன்று கேட்டதாக லீ ஹான்ஸன் தன் வாக்குமூலத்தில் தெரிவித்திருக்கிறார். பதறியடித்துக்கொண்டு உடனே தொலைக்காட்சியை உயிர்ப்பித்து, ஏதாவது செய்தி வருகிறதா என்று பார்க்கத் தொடங்கினார்.

இரண்டாவது விமானம், வர்த்தக மையக் கட்டடத்தின் தெற்கு கோபுரத்தின்மீது அப்போதுதான் மோதிக்கொண்டிருந்தது. சரியாக மணி 9.03.

மூன்றாவது விமானம் அமெரிக்கன் 77. எட்டு இருபதுக்குப் பறக்கத் தொடங்கிய இந்த விமானம், 8.54-க்குத் தன் பாதையிலிருந்து திரும்பத் தொடங்கியது. தெற்கு நோக்கிப் பறக்க ஆரம்பித்தது. இரு நிமிடங்களில் விமானத்தில் இருந்த டிரான்ஸ்பாண்டர் ஸ்விட்ச் ஆஃப் செய்யப்பட்டது. ராடார் தொடர்பு கூட சாத்தியமில்லாமல் போனது. இந்தியானா போலீஸ் ஏடிசி, என்னென்னவோ முறைகளில் எப்படியாவது அந்த விமானத்தைத் தொடர்புகொள்ளக் குட்டிக்கரணம் போட்டுப் பார்த்தது. ம்ஹூம். நயா பைசா பிரயோஜனமில்லை.

வேறு வழியே இல்லாமல் அன்றைய தினத்தின் அத்தனை அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானங்களையும் உடனடியாகத் தரையிறங்கவும் எங்கும் கிளம்பாதிருக்கவும் உத்தரவிட்டார்கள். இந்த உத்தரவுக் காண்டமெல்லாம் அரங்கேறிக்கொண்டிருந்தபோதே, இந்த மூன்றாவது விமானம் வெறும் ஏழாயிரம் அடி உயரத்துக்குத் தாழ வந்துகொண்டிருந்தது. கச்சாமுச்சாவென்று வேகம். குரங்கு பெடலில் சைக்கிள் ஓட்டும் சிறுவனைப் போல் விமானத்தை ஓட்டிக்கொண்டிருந்தார்கள் கடத்தல்காரர்கள்.

முன்னதாக வர்த்தக மையக் கட்டடங்கள் இரண்டும் தாக்கப்பட்டுவிட்ட விஷயம் வெளியே தெரிந்து, தேசமே அலர்ட் ஆகிவிட்டிருந்தபடியால், இந்த மூன்றாவது விமானத்தின் இலக்கு எதுவாக இருக்குமோ என்கிற அச்சம், அத்தனை பேருக்குமே இருந்தது. வெள்ளை மாளிகை உள்பட பல்வேறு முக்கியக் கட்டடங்களைக் குறிப்பிட்டு, ரொனால்ட் ரீகன் வாஷிங்டன் தேசிய விமான நிலைய அதிகாரிகள், ரகசிய பாதுகாப்பு அதிகாரிகளை எச்சரித்தார்கள். அப்போது, அமெரிக்கன் 77 விமானம், பெண்டகன் கட்டடத்தின் தெற்கு தென்மேற்கு திசையில் ஐந்து மைல் தொலைவில் வந்துகொண்டிருந்தது.

திடீரென்று 330 டிகிரி கோணத்தில் ஒரு திரும்பு, திரும்பியது. திரும்பி, மீண்டும் நேராகச் செல்லத் தொடங்கியபோது, அதன் உயரம் தடாரென்று சரிந்து வெறும் 2,200 அடியாகக் குறைந்திருந்தது. விமானத்தை ஓட்டிக்கொண்டிருந்த கடத்தல்காரர்கள், விமானத்தின் வேக விசையை அதிகபட்சமாகத் திருப்பி, உச்சபட்ச வேகத்துடன் இயக்கத் தொடங்கினார்கள்.

மணி 9:37. பெண்டகன் கட்டடத்தின் மீது விமானம் வந்து மோதியபோது, அதன் வேகம் மணிக்கு 530 மைல்.

நான்காவது விமானம் யுனைடட் 93. ஜியாத் ஜரா ஓட்டிய விமானம் இது. இந்த விமானம் புறப்பட்டு, இலக்கை நெருங்குவதற்குள் மற்ற மூன்று விமானங்களின் கதி என்னவென்கிற விஷயம், இந்த விமானத்தில் இருந்த அத்தனை பேருக்கும் தெரிந்துவிட்டது. எல்லாம் செல்போன் உபயம்.

தங்கள் விமானமும் கடத்தப்பட்டிருப்பதை அறிந்த அந்த விமானத்தில் இருந்த பயணிகள், இறுதியாக ஒரு முயற்சி செய்துபார்த்துவிடுவோமே என்றுதான் கடத்தல்காரர்களுடன் யுத்தமிடத் தொடங்கினார்கள். அந்த யுத்தத்தின் சப்தங்கள் எல்லாம் காக்பிட் ரெக்கார்டரில் துல்லியமாகப் பதிவாகியிருந்தன. கொத்துக்கொத்தாகக் குரல்கள். ஆக்ரோஷக் குரல்கள். தாக்கும் வெறி மிக்க குரல்கள். ஐயோ என்ற அலறல்கள். இனம் புரியாத சப்தங்கள். போட்டு உடைக்கும் சப்தம். அலறும் ஒலி. ஆக்ரோஷ வெறி.

விமானத்தில் கலவரம் ஏற்படுவதைக் கண்டு ஜரா உஷாரானான். உடனே, அவன் விமானத்தை இடது வலதாகத் தாறுமாறாக ஓட்டத் தொடங்கினான். முதல் வகுப்பில் நுழைந்து, காக்பிட்டின் வாசலில் காவலுக்கு நின்ற தம் சகாக்களைத் தாக்கிக்கொண்டிருந்த பயணிகளை நிலைதடுமாற வைக்கவே, அவன் அந்த நடவடிக்கையை மேற்கொண்டான். 9.58-க்குத் தன் சகா ஒருவனுக்கு, காக்பிட்டின் கதவை அடைக்கும்படி ஜரா உத்தரவிட்ட குரல் பதிவாகியிருக்கிறது.

ஆயினும் பயணிகளின் ஜீவமரணப் போராட்டம் நிற்கவில்லை. நிலைமை தீவிரமாவதைக் கண்ட ஜரா, தன் சகா ஒருவனிடம் "நாம் முடித்துவிடலாமா?" என்று கேட்டான்.

"இல்லை. இன்னும் இல்லை. எல்லாரும் வந்து கூடட்டும்."

வெடிகுண்டை வெடிக்கச் செய்வதாக மிரட்டி, பயணிகளைப் பணியவைக்கலாம் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால், சில பயணிகள், "நாங்கள் இறக்கத் தயார். ஆனால், போராட்டத்தின் இறுதியில் இறப்போம்" என்று கத்தினார்கள்.

தாக்குப்பிடிக்கவே முடியாது என்ற நிலைக்கு விமானம் வந்து சேர்ந்தது. ஜரா தன் சக கடத்தல்காரனிடம் கேட்டான்: "இப்போது சொல். இறக்கிவிடவா? இவ்வளவுதான் முடியுமா?"

அவன் சொன்னான்: "ஆம். இதுதான் எல்லை. தாக்குப்பிடிக்க முடியுமென்று தோன்றவில்லை. நீ இறக்கிவிடு."

அவ்வளவுதான். தடதடவென்று உயரம் சரிந்து, விமானம் கீழே இறங்கத் தொடங்கியது. "அல்லா ஹூ அக்பர்! அல்லா ஹூ அக்பர்!" என்று ஜரா கத்தினான். அந்தச் சப்தத்துடனேயே பயணிகள் அப்போதும் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்த சப்தமும் பதிவாகியிருக்கிறது.

பென்சில்வேனியா பகுதியில் உள்ள ஷாங்க்ஸ்வில் (ஷிலீணீஸீளீஉஸ்வீறீறீமீ) என்ற இடத்தில், வெட்டவெளியில், மணிக்கு 580 மைல் வேகத்தில் சீறிவந்த விமானம் மோதிப் பாய்ந்தது.

அத்தனை பேரும் அமரர் ஆனார்கள். (இந்த நான்கு விமானங்களும் மோதியதால் இறந்து போனவர்களின் புகைப்படங்களே இந்தத் தொடரின் மூன்று பக்க விளிம்புகளிலும் அச்சாகியுள்ளன.)

நான்கு விமானங்கள். மூன்று இலக்குகள் பிசகின்றித் தாக்கப்பட்டு, ஒன்று புல்வெளியில் விழுந்து நொறுங்கிப்போனது.

அல் காயிதாவைப் பொறுத்தவரை இது மிகப்பெரிய வெற்றி. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆன்மாவில் விழுந்த அடி. பல்லாயிரக்கணக்கான மக்கள் மரணமடைந்ததும், அமெரிக்காவின் கௌரவச் சின்னங்கள் சர்வநாசமானதும் மட்டுமல்ல. உலகின் மிச்சமிருக்கும் ஒரே வல்லரசு என்கிற கிரீடத்தைத் தூக்கிக் கடாசி துவம்சம் செய்துவிட்டது ஓர் இயக்கம். எங்கோ ஆப்கன் காடுகளில் உட்கார்ந்துகொண்டு ஒரே ஒரு தாடிக்காரன் தீட்டிய திட்டம்!